முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 612**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**02.06.2021**, புதன்கிழமை

1. ஞானக்கடலே அரங்கா போற்றி
ஞானிகள் பலம்கொண்ட தேசிகா போற்றி
வானவர் துணைகொண்ட ஞானியே போற்றி
வள்ளலே வாழும்தவசியே அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரை ஆசி
ஆற்றல்பட அரங்கனுள் என்சக்தி
அதீதமகா சூட்சுமமாக நிரம்பிஇருக்க
3. இருக்கவே இந்தகலியுகத்தை மாற்றுகின்ற
இணையில்லாதபடைப்பாய் அரங்கன்அவதாரம் நிகழ்த்திஇருக்க
கருத்தாக அரங்கன் தொடர்புகொண்டு
கலியுகத்தில் சேருகின்ற தொண்டர்படைகள் மூலம்
4. மூலமே உலகமாற்றத்தை யானும்
முழுமைபட நிகழ்த்தி அருள்புரிவேன்
காலமதில் இருந்துவரும் பேரிடர் துன்பங்கள்
கருணைகொண்ட அரங்கன் அருளும் தர்மமும்
5. தர்மமும் கைக்கொண்ட மக்களுக்கெல்லாம்
கட்டாயம் இடரின்றி அனுகாவண்ணம் ஒதுங்கும்
தேக்கமின்றி அரங்கன் தொடர்புகூட்டி வருபவர்களுக்கு
திருவருள் துணையாக நின்று அழியாமைதரும்
6. தர்மவா அரங்கன் தர்மத்தில்
தனஉதவி செய்துகொண்டு வளரும் மக்களுக்கு
ஞானமொடு அழியாத பெரும் சூட்சுமசக்தியாய்
ஞானபண்டிதன் என்அருளும் துணையாகநின்று காத்தருளும்
7. அருளவே அரங்கனே கலியின் சிறந்தயோகி
அரங்கன் சொல் செயல்கள் அனைத்தும்
இருள்வெல்லும் சரவணச் சுடராக இருக்க
இனியும் காலம்கடத்தா கலியுக மக்களே
8. மக்களே அரங்கன்வாழ் ஏழாம்படைவீடு நோக்கி
மனமுவந்து சரணடைந்து தொடர்புகூட்டி
தேக்கமின்றி தொடர்ந்து வருதல்காண
தேசிகன் நாமஜெபத்தோடு ஆறுமுகன்என் வழிபாடு தொடரதொடர

9. தொடரவே உலகை வதைக்கின்ற
தொடருகின்ற பேரிடர் துன்பம் அகன்றோடும்
இடரின்றி இந்தஉலகம் சடுதி பாதுகாப்புபெறும்
இயம்பிய சுப்ரமணியப்பெருமான் என்ஞான அறிவுரைஆசிமுற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.